DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 3/2018**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜா | Caste: | |
| Father's Name: | கருப்பையா | Calling: | கொத்தனுர் |
| Village: | இலந்தைகூட்டம் | Religion: | |
| Taluk: | இராமநாதபுரம் | Age: | 27 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 24.09.2025

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதன்மை விசாரணை**

நான் தேனி மாவட்ட சிறையில் வேறு ஒரு வழக்கில் Remand prisioner ஆக இருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம் தேவிப்பட்டிணம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட இலந்தைக்கூட்டம் கிராமம், அ.சா.1 சித்ரா எனது அக்கா, அ.சா.2 அஞ்சலா தேவி எனது அம்மா, அ.சா.3. ரிசாந்தினி எனது அண்ணன் மகள், ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. கீழக்கரை முள்ளுவாடியை சேர்ந்த ஜெயராஜ் மகன் சூரியா என்பவரை தெரியும். பார்வை மகஜரில் முதலில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து சுமார் 4 வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3.** சுமார் 5 வருடத்திற்கு முன்பு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அதை நான் 4 வருடங்களுக்கு முன்பு நான் காவல்நிலையத்தில் வைத்து

போட்டேன். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ 4**.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அறிவிக்க கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 12.06.2017 ம் தேதி காலை சுமார் 8.15 மணியளவில் நானும் கீழக்கரை முள்வாடியை சேர்ந்த ஜெயராஜ் மகன் சூர்யாயும் கீழக்கரையில் உள்ள மௌலானா தோப்பிற்கு வந்திருந்தபோது அங்கு வந்த கீழக்கரை டி.எஸ்.பி அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் அதற்கு சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் ஜெயராஜ் மகன் சூர்யாவும் கையெழுத்து செய்தோம் என்றும் கடந்த 12.05.2017 ம் தேதி காவல் துறை கண்காணிப்பாளர் விசாரிக்கும் போது கூறிவிட்டு தற்போது அ.சா.1 சித்ராவின் சொல்படி, என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும் பார்வை மகஜரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றும் சம்பவ இடத்தில் வைத்து தடையங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் கைப்பற்றுதல் மகஜரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் 2 வது ஆக கையெழுத்து செய்தவர் யார் என்று தெரியவில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)